பிரதம செயலாளர் செயலகம்,வடக்கு மாகாண சபை

ප්‍රධාන ලේකම් කාර්යාලය, උතුරු පළාත් සභාව

**Chief Secretary's Secretariat, Northern Provincial Council**

மாகாணசபை வளாகம், A9 வீதி, கைதடி
පළාත් සභාව සංකීර්ණය, A9 පාර, කයිතඩි
**Provincial Council Complex , A9 Road, Kaithady**

Telephone : 021 222 0843 (Dir)
: 021 222 0840 (Gen)
Fax : 021 222 0841
Website : www.np.gov.lk
e-mail : chiefsecnpc@gmail.com


MY NO: NP/09/FRM/R2/CIR - REV/12/2018 22.11.2018

**மாகாணத் திறைசேரி சுற்றுநிருப இல:- PT/05/2018**

செயலாளர்கள்,
பிரதிப் பிரதம செயலாளர்கள்,
திணைக்களத் தலைவர்கள்,
வட மாகாணம்.

**<u>வட மாகாண கௌரவ முதலமைச்சர், கௌரவ அவைத் தலைவர், கௌரவ அமைச்சர்கள், கௌரவ எதிர்க்கட்சித் தலைவர், கௌரவ பிரதி அவைத் தலைவர், கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரினதும் கௌரவ அமைச்சர்களின் பிரத்தியேக உத்தியோகத்தர்களினதும் மாதாந்தக் கொடுப்பனவு</u>**

மேற்படி விடயம் தொடர்பான ஜனாதிபதி செயலகத்தின் PS/CSA/11-18ம் இலக்கமும், 12.10.2018 ம் திகதியும் கொண்ட சுற்றுநிருபத்தின் மீது தங்கள் கவனம் ஈர்க்கப்படுகிறது. (குறித்த சுற்றுநிருபத்தின் பிரதி இத்துடன் இணைக்கப்பட்டுள்ளது)

மேற்படி சுற்றுநிருபத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களை 01.11.2018ம் திகதி முதல் நடைமுறைப்படுத்துமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

மேலும், இவ்விடயத்துடன் தொடர்புடைய PF/07/2013ம் இலக்க மற்றும் அதன் திருத்தங்களைக் கொண்ட அனைத்து மாகாண நிதிச் சுற்றுநிருபங்களும் இத்தால் இரத்துச்செய்யப்படுகின்றன என்பதையும் அறியத்தருகின்றேன்.

அ.பத்திநாதன்
பிரதம செயலாளர்

பிரதிகள்:-

1. கௌரவ ஆளுநரின் செயலாளர் - வ.மா - கௌரவ ஆளுநர் அவர்களுக்கு அறியத்தருவதற்காக
2. உதவிக் கணக்காய்வாளர் நாயகம் - வ.மா } தகவலுக்காக
3. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர் - வ.மா }

ජනාධිපති කාර්යාලය

சனாதிபதி அலுவலகம்

PRESIDENTIAL SECRETARIAT

எனது இல: பீஎஸ்/சீஎஸ்ஏ/00/1/4/2 சுற்றறிக்கை இல: PS/CSA/11 - 18

2018 அக்டோபர் மாதம் 12 ஆந் திகதி

கௌரவ மாகாண ஆளுநர்களுக்கும்
மாகாண பிரதம செயலாளர்கள்
மற்றும் ஆளுநர்களின் செயலாளர்களுக்கும்

**அரசின் செலவு முகாமைத்துவம்**

கௌரவ மாகாண ஆளுநர்களின் / கௌரவ மாகாண பிரதம அமைச்சர்களின் / கௌரவ மாகாண அமைச்சர்களின் /கௌரவ மாகாண சபைத் தவிசாளர்கள் மற்றும் கௌரவ மாகாண சபை பிரதி தவிசாளர்களின் தனியார் பணிட்டொகுதி உள்ளிட்ட ஏனைய வசதிகளும் அத்துடன் கௌரவ மாகாண சபை உறுப்பினர்களின் வசதிகள் தொடர்பாக பின்வரும் வரையறைகளுக்குட்பட்டு செயற்படுவதற்கு ஒவ்வொரு மாகாண சபை நிறுவனமும் நடவடிக்கை எடுக்க வேண்டும். இச்சுற்றறிக்கை அமைச்சரவையின் அங்கீகாரத்தின் கீழ் வெளியிடப்படுகின்றது.

1. **அலுவலகக் கட்டிடங்கள்**

மாகாண அமைச்சுக்கள் மற்றும் அவற்றின் கீழுள்ள அனைத்து நிறுவனங்களினதும் அலுவலகங்களை இயன்றளவு அரசாங்கக் கட்டிடங்களில் நடாத்திச் செல்ல வேண்டும். தனியார் கட்டிடங்களை குத்தகைக்கு அல்லது வாடகைக்கு பெறுவதற்காக பிரதம செயலாளர்களினால் அனுமதி வழங்க வேண்டியது விசேட நிலைமைகளின் கீழ் அரசாங்க விலைமதிப்பிற்குட்பட்டு மாத்திரமாகும்.

2. கௌரவ மாகாண ஆளுநர்களின் / கௌரவ மாகாண பிரதம அமைச்சர்களின் /கௌரவ மாகாண அமைச்சர்களின் / கௌரவ மாகாண சபை தவிசாளர்கள் மற்றும் கௌரவ மாகாண சபை பிரதி தவிசாளர்களின் உதவி பணிட்டொகுதி.

2.1 கௌரவ மாகாண ஆளுநர்களின் / கௌரவ மாகாண பிரதம அமைச்சர்களின் /கௌரவ மாகாண அமைச்சர்களின் / கௌரவ மாகாண சபை தவிசாளர்கள் மற்றும் கௌரவ மாகாண சபை பிரதி தவிசாளர்களின் அலுவலகங்களில் சேவையில் ஈடுபடுத்தப்படும் உதவிப் பணிட்டொகுதி பின்வரும் உச்சக்கட்ட எண்ணிக்கையை மீறுதலாகாது.

| பதவி | கௌரவ மாகாண ஆளுநர்/ கௌரவ மாகாண பிரதம அமைச்சரின் பணிட்டொகுதி | கௌரவ மாகாண அமைச்சர் / கௌரவ மாகாண சபை தவிசாளரின் பணிட்டொகுதி | கௌரவ மாகாண சபை பிரதி தவிசாளரின் பணிட்டொகுதி |
|---|---|---|---|
| 1. பிரத்தியேகச் செயலாளர் | 01 | 01 | - |
| 2. கூட்டிணைப்புச் செயலாளர் | 02 | 01 | - |
| 3. ஊடகச் செயலாளர் | 01 | - | - |
| 4. மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் | 01 | 01 | - |
| 5. பிரத்தியேக உதவியாளர் | 01 | 01 | - |
| 6. முகாமைத்துவ உதவியாளர் | 05 | 02 | 01 |
| 7. அலுவலக பணியாளர் | 02 | 02 | 01 |
| 8. சாரதி (பாதுகாப்பு வண்டியின் சாரதி தவிர்ந்த) | 02 | 02 | 01 |
| மொத்தம் | 15 | 10 | 03 |

2.2 பிரத்தியேகச் செயலாளர், கூட்டிணைப்புச் செயலாளர், ஊடகச் செயலாளர் மற்றும் மக்கள் தொடர்பு உத்தியோகத்தர்கள் ஆகிய உத்தியோகத்தர்களை தொடர்புடைய கௌரவ மாகாண ஆளுநர், கௌரவ மாகாண பிரதம அமைச்சர்/கௌரவ மாகாண அமைச்சர்/ கௌரவ மாகாண சபை தவிசாளர் ஆகியோர் பதவி வகிக்கும் காலத்திற்கு மட்டும் வரையறுக்கப்படும் வகையில் தற்காலிக அடிப்படையில் சேவையில் ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். குறித்த பதவிக்காக அரச நிறுவனத்தின், அரச கூட்டுத்தாபனத்தின் அல்லது நியதிச்சட்ட நிறுவனத்தின் தற்போது சேவையில் உள்ள உத்தியோகத்தர் ஒருவரை இணைப்புச் செய்வதானால் அவருக்குச் செலுத்த வேண்டியது அவர் அந்நிறுவனத்தில் பெற்றுக் கொண்டிருந்த சம்பளமல்லாது இணைப்புச் செய்யப்பட்ட பதவிக்கான சம்பளமாகும்.

அதே போன்று மேற்குறிப்பிட்டுள்ள 2.1 ஆம் பந்தியில் 5 முதல் 8 இலக்கங்கள் வரையிலான ஊழியர்களை அமய அல்லது ஒப்பந்த அடிப்படையில் சேர்த்துக் கொள்வதாயின் அவர்கள் அப்பதவிகளில் அங்கீகரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்தில் குறிப்பிடப்பட்ட தகைமைகளைப் பூர்த்திச் செய்திருத்தல் வேண்டும். அவர்களின் சேவையும் கௌரவ மாகாண ஆளுநர்/ கௌரவ மாகாண பிரதம அமைச்சர் / கௌரவ மாகாண அமைச்சர் / கௌரவ மாகாண சபை தவிசாளர் ஆகியோர் பதவி வகிக்கும் காலத்திற்கு வரையறுக்கப்படல் வேண்டும். எவ்வாறாயினும் மேற்குறிப்பிடப்பட்டுள்ள உதவி பணிட்டொகுதியை இயன்றளவு தற்போது அரச சேவையில் உள்ள உத்தியோகத்தர்களுள் தெரிவு செய்து கொள்ள வேண்டியதுடன், அவ்வாறு செய்ய முடியாத சந்தர்ப்பங்களில் அப்பதவிக்காக அரசாங்கக் கூட்டுத்தாபனம் அல்லது நியதிச்சட்ட நிறுவனமொன்றில் உத்தியோகத்தர் ஒருவரை இணைப்புச் செய்து கொள்வதாயின் அவர் அந்நிறுவனத்தில் பெற்றுக் கொண்டிருந்த சம்பளமல்லாமல் இணைப்புச் செய்யப்பட்ட பதவிக்குரிய சம்பளத்தைச் செலுத்த வேண்டும். அதேபோன்று மேற்போந்த 2.1 ஆம் பந்தியின் 6 முதல் 8 இலக்கம் வரையில் கௌரவ மாகாண சபை பிரதி தவிசாளரின் உதவி பணிட்டொகுதியின் பதவிக்காக மேற்படி விடயங்கள் அவ்வாறே ஏற்புடையதாகும்.

3. உத்தியோகபூர்வ வாகனங்கள்

3.1 கௌரவ மாகாண ஆளுநர்கள் / கௌரவ மாகாண பிரதம அமைச்சர்கள் / கௌரவ மாகாண அமைச்சர்கள் மற்றும் கௌரவ மாகாண சபை தவிசாளர்கள் ஆகியோரின் பாவனைக்காக ஒதுக்கப்படும் உச்சக்கட்ட உத்தியோகபூர்வ வாகனங்களின் எண்ணிக்கை (மோட்டார் வாகனங்கள், ஜீப் டபள் கெப்) 02 ஆகும். அவசியபடுமாயின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்காக ஒரு பாதுகாப்பு வாகனம் உரித்தாவதுடன், கௌரவ பிரதி தவிசாளர்களுக்காக உத்தியோகபூர்வ வாகனமொன்று மட்டும் உரித்தாகும்.

3.2 கௌரவ மாகாண சபை உறுப்பினர்கள் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு உரித்துடையவராகார்.

3.3 மேற்குறிப்பிட்டுள்ள வாகன எண்ணிக்கையை விட கூடிய எண்ணிக்கை கௌரவ ஆளுநர்கள் / கௌரவ மாகாண பிரதம அமைச்சர்கள் / கௌரவ மாகாண அமைச்சர்கள் /கௌரவ மாகாண சபை தவிசாளர்கள் மற்றும் கௌரவ மாகாண சபை பிரதி தவிசாளர்கள் ஆகியோரினால் உத்தியோகபூர்வ வாகனங்களாக தற்போது பயன்படுத்தப்படுவதாயின் அவ் வாகனங்களை உரிய மாகாணத்தின் அமைச்சொன்றின் அல்லது வேறு நிறுவனத்தின் தேவைகளுக்காக பயன்படுத்தக் கூடிய வகையில் திரும்பப் பெற்றுக் கொள்வதற்கு மாகாண பிரதம செயலாளர்கள் தாமதிக்காது வேண்டிய நடவடிக்கை எடுக்க வேண்டும்.

3.4 மேற்போந்த 2.1 ஆம் பந்தியில் காட்டப்பட்டுள்ள கௌரவ மாகாண ஆளுநர்கள் /கௌரவ மாகாண பிரதம அமைச்சர்களின் உதவிப் பணிட்டொகுதியின் இலக்கம் 1 தொடக்கம் 4 வரையிலான உத்தியோகத்தர்கள் உத்தியோகபூர்வ வாகனமொன்றிற்காக மட்டும் உரித்துடையவர்களாவதுடன், கௌரவ மாகாண அமைச்சர்களின் / கௌரவ மாகாண சபை தவிசாளர்களின் உதவிப் பணிட்டொகுதியின் இலக்கம் 1, 2 மற்றும் 4 ஆம் இலக்க உத்தியோகத்தர்கள் மட்டும் உத்தியோகபூர்வ வாகனமொன்றிற்காக உரித்துடையவர்களாவர்.

4. எரிபொருள் மற்றும் சாரதிகளுக்கான மேலதிகப் படியும் இணைந்தபடியும்.

4.1 கௌரவ மாகாண ஆளுநர்கள் /கௌரவ பிரதம அமைச்சர்கள் / கௌரவ மாகாண அமைச்சர்கள் /கௌரவ மாகாண சபை தவிசாளர்கள் / கௌரவ மாகாண சபை பிரதி தவிசாளர்கள் மற்றும் கௌரவ மாகாண சபை உறுப்பினர்கள் ஆகியோர்களின் மாதமொன்றிற்கான உச்சக்கட்ட எரிபொருள் அளவு/ படி பின்வருமாறாகும்

| பதவி | பெற்றோல் வாகனமொன்றிற்காக மாதமொன்றிற்கு (லீட்டர்) | டீசல் வாகனமொன்றிற்காக மாதமொன்றிற்கு (லீட்டர்) |
|---|---|---|
| கௌரவ மாகாண ஆளுநர்கள் / கௌரவ மாகாண பிரதம அமைச்சர்கள் | 600 | 500 |
| கௌரவ மாகாண அமைச்சர்கள் /கௌரவ மாகாணசபை தவிசாளர்கள் | 600 | 500 |
| கௌரவ மாகாணசபை பிரதி தவிசாளர்கள் | 300 | 250 |
| கௌரவ மாகாண சபை உறுப்பினர்கள் | தான் பிரதிநிதித்துவப்படுத்தும் மாவட்டத்திலிருந்து மாதமொன்றில் 2 கூட்டங்களில் பங்குபற்றுவதற்காக மாகாணசபைக்கு வருதல் சார்பாக மாகாண சபைக்குள்ள தூரத்தின் அடிப்படையில் கணிக்கப்பட்ட பெற்றோல் அல்லது டீசல் அளவுக்காக நில்வுகின்ற சந்தை விலைக் கணக்கின்படி கொடுப்பனவொன்று செய்யப்படும். | |

4.2 கௌரவ மாகாண ஆளுநர் /கௌரவ மாகண பிரதம அமைச்சர் / கௌரவ மாகாண அமைச்சர்கள் மற்றும் கௌரவ மாகாண சபை தவிசாளர்கள் ஆகியோரின் பணிட்டொகுதியினது உத்தியோகபூர்வ வாகனங்களுக்காக பின்வரும் வரையறைக்குட்பட்டு மாதாந்த எரிபொருள் கொடுப்பனவொன்றை வழங்கலாம்.

| ❖ உரித்துப் பெறும் உத்தியோகத்தர்கள் | வாகனத்திற்காக மாதமொன்றிற்கு அங்கீகரிக்கப்பட்ட எரிபொருட்களின் அளவு பெற்றோல் / டீசல் (லீற்றர்) |
|---|---|
| பிரத்தியேகச் செயலாளர் | 240 |
| கூட்டிணைப்புச் செயலாளர் /மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் / ஊடகச் செயலாளர் | 218 |

❖ உரித்துப் பெறும் உத்தியோகத்தர்கள் என்பது 3.4 ஆம் இலக்க பந்தியில் குறிப்பிட்டுள்ள உத்தியோகத்தர்கள் ஆவர்.

4.3 எரிபொருள் படிகள் பற்றுச்சீட்டுக்களின் மீது செய்யப்படும் மீளளிப்புக்கள் அல்லாமல் மாதாந்தக் கொடுப்பனவாகச் செலுத்த வேண்டும். உரிய மாதத்தின் முதலாம் திகதி உள்ளூர்ச்சந்தையில் நிலவும் எரிபொருள் விலைகளின் படி கொடுப்பனவைத் தீர்மானிக்க வேண்டும்.

4.4 கௌரவ மாகாண ஆளுநர்கள் /கௌரவ பிரதம அமைச்சர்கள் / கௌரவ மாகாண அமைச்சர்கள் மற்றும் கௌரவ மாகாண சபை தவிசாளர்கள் ஆகியோரின் பணிட்டொகுதியில் உத்தியோகபூர்வ வாகன உரித்துடைய உத்தியோகத்தர்கள் மேலதிக நேரக் கடமைகளுக்காக சாரதிகளை ஈடுபடுத்தும் போது உரியவாறு அத்தியாவசியமான கடமைகளில் மட்டும் ஈடுபடுத்தப்படுவர் என எதிர்பார்க்கப்படுகிறது. கௌரவ மாகாண ஆளுநர்கள் / கௌரவ மாகண பிரதம

அமைச்சர்கள் / கௌரவ மாகாண அமைச்சர்கள் / கௌரவ மாகாண சபை தவிசாளர்கள் மற்றும் கௌரவ மாகாண சபை பிரதி தவிசாளர்கள் ஆகியோரின் சாரதிகள் மாதாந்தம் 200 மணித்தியாலங்கள் எனும் வரையறைக்குட்பட்டு மேலதிக நேரப் படியை பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன், அவர்கள் மாதாந்தம் உச்ச கட்ட 12 நாட்களுக்காக இணைந்த படிகளைப் பெறுவதற்கு உரித்துடையவர்களாவர்.

4.5 கௌரவ மாகாண ஆளுநர்கள் /கௌரவ மாகாண பிரதம அமைச்சர்கள் /கௌரவ மாகாண அமைச்சர்கள் மற்றும் கௌரவ மாகாண சபை தவிசாளர்கள் ஆகியோரின் பிரதியேக பணிட்டொகுதியின் உத்தியோகபூர்வ வாகனங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்ட சாரதிகளுக்கு பின்வரும் வரையறைக்குட்பட்டு மேலதிக நேரப்படிகளையும் இணைந்த படிகளையும் செலுத்த வேண்டும்.

| உத்தியோகபூர்வ வாகனங்கள் இணைப்புச் செய்யப்பட்ட உத்தியோகத்தர்களின் பதவிகள் | மாதாந்த உச்சகட்ட மேலதிக நேரப்படி (மணித்தியாலங்கள்) | மாதாந்த உச்சகட்ட இணைந்தபடி (நாட்கள்) |
|---|---|---|
| கௌரவ மாகாண ஆளுநரின் / கௌரவ மாகாண பிரதம அமைச்சரின் பிரத்தியேகச் செயலாளர் | 125 | 09 |
| கௌரவ மாகாண அமைச்சரின் / கௌரவ மாகாண சபை தவிசாளரின் பிரத்தியேகச் செயலாளர் | 100 | 06 |
| கௌரவ மாகாண ஆளுநரின் / கௌரவ மாகாண பிரதம அமைச்சரின் கூட்டிணைப்புச் செயலாளர் / மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் / ஊடகச் செயலாளர் | 100 | 06 |
| கௌரவ மாகாண அமைச்சரின் / கௌரவ மாகாண சபை தவிசாளரின் கூட்டிணைப்புச் செயலாளர் /மக்கள் தொடர்பு உத்தியோகத்தர் | 100 | 06 |

5. உத்தியோகபூர்வ தொலைபேசிகளின் எண்ணிக்கையும், தொலை பேசி படிகளும்.

5.1 கௌரவ மாகாண ஆளுநர்/கௌரவ மாகாண பிரதம அமைச்சர் / கௌரவ மாகாண அமைச்சர்/ கௌரவ மாகாண சபை தவிசாளர் / கௌரவ மாகாண சபை பிரதி தவிசாளர் /கௌரவ மாகாண சபை உறுப்பினர் ஆகியோருக்கு வழங்கப்படும் உச்சகட்ட உத்தியோகபூர்வ தொலைபேசி எண்ணிக்கைகள் மற்றும் தொலைபேசிச் செலவுகளின் (மாதாந்த நிலையான கட்டணம் மற்றும் வரிகள் தவிர்ந்த) மொத்தத் தொகைக்கான உச்ச எல்லைகள் பின்வருமாறு : சர்வதேச தொலைபேசி கட்டணங்களாயின் அந்தக் கட்டணங்களையும் இவ் எல்லைக்குள் ஈடுசெய்ய வேண்டும். கௌரவ உறுப்பினர்களுக்கான உத்தியோகபூர்வ தொலைபேசி படிகள் விலைப்பட்டியல்களின் மீது அல்லாது படியாக செலுத்த வேண்டியதுடன், ஏனைய பதவிகளுக்காக விலைப்பட்டியல்களைச் செலுத்த வேண்டும்.

| பதவி | தொலைபேசிகளின் எண்ணிக்கையும் உச்சகட்ட செலவின் எல்லையும் | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | அலுவலகத் தொலை பேசிகள் மற்றும் பெக்ஸ் | உச்சகட்ட செலவின் எல்லை | வீடுகள் | உச்சகட்ட செலவின் எல்லை | நடமாடும் | உச்சகட்ட செலவின் எல்லை (ரு) |
| கௌரவ மாகாண ஆளுநர்கள் / கௌரவ மாகாண பிரதம அமைச்சர்கள் | 02 | 20,000.00 | 02 | 10,000.00 | 01 | 10,000.00 |
| கௌரவ மாகாண அமைச்சர் / கௌரவ மாகாண சபை தவிசாளர் | 02 | 20,000.00 | 02 | 10,000.00 | 01 | 10,000.00 |

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| கௌரவ மாகாணசபை பிரதி தவிசாளர் | 01 | 10,000.00 | 01 | 5,000.00 | 01 | 5,000.00 |
| கௌரவ மாகாண சபை உறுப்பினர் | 01 | 10,000.00 | 01 | 7,500.00 | 01 | 7,500.00 |

5.2 கௌரவ மாகாண ஆளுநர்கள் / கௌரவ மாகாண பிரதம அமைச்சர்கள் / கௌரவ மாகாண அமைச்சர்கள் மற்றும் கௌரவ மாகாண சபை தவிசாளர்கள் ஆகியோரின் உதவிப் பணிட்டொகுதிகளுக்காக வழங்கப்படும் உச்சகட்ட உத்தியோகபூர்வ கடமை தொலைபேசி தொடர்புகளின் எண்ணிக்கைகள் மற்றும் தொலைபேசி செலவுகளின் (மாதாந்த நிலையான கட்டணம் மற்றும் வரிகள் தவிர்ந்த) மொத்தத் தொகைக்கான உச்சகட்ட எல்லைகள் பின்வருமாறு : சர்வதேச தொலைபேசிக் கட்டணங்கள் இருப்பின் அந்தக் கட்டணத்தையும் இவ் எல்லைக்குள் ஈடு செய்ய வேண்டும். பின்வரும் உதவிப் பணிட்டொகுதியின் உத்தியோகபூர்வ தொலைபேசிக்காக பற்றுச்சீட்டுக்களை பூர்த்தி செய்ய வேண்டும்.

| பதவி | தொலைபேசிகளின் எண்ணிக்கை | | | | உச்சகட்ட செலவு எல்லை (ரூ) |
|---|---|---|---|---|---|
| | அலுவலகம் | வீடு | நடமாடும் | பெக்ஸ் | |
| பிரத்தியேகச் செயலாளர் | 01 | 01 | 01 | 01 | 6,000.00 |
| கூட்டிணைப்புச் செயலாளர் | 01 | 01 | 01 | - | 5,000.00 |
| ஊடகச் செயலாளர் | 01 | 01 | 01 | 01 | 5,000.00 |
| மக்கள் தொடர்பு உத்தியோகத்தர | 01 | 01 | 01 | - | 5,000.00 |

5.3 மேலே குறிப்பிடப்பட்ட உச்சகட்ட எல்லைக்கு அமைய ஏதேனும் மாதத்திற்குள் மீதி இருக்குமாயின் அந்தத் தொகையை அதே நிதியாண்டின் மற்றொரு மாதத்தின் மேலதிக தொலைபேசி செலவுக்காக பதிலீடு செய்யலாம்.

5.4 கௌரவ மாகாண ஆளுநர்கள் / கௌரவ மாகாண பிரதம அமைச்சர் /கௌரவ மாகாண அமைச்சர்கள் / கௌரவ மாகாணசபை தவிசாளர் ஆகியோரின் உதவிப் பணிட்டொகுதிக்காக அரசாங்கச் செலவில் நடமாடும் தொலைபேசிகளை வழங்க முடியாது.

6. **வேறு படிகள்**

6.1 கௌரவ மாகாண ஆளுநர்கள் / கௌரவ மாகாண பிரதம அமைச்சர் /கௌரவ மாகாண அமைச்சர் / கௌரவ மாகாண சபை தவிசாளர் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு 175,000.00 ரூபாவான இலவச அஞ்சல் படி உரித்தாகின்றது.

6.2 கௌரவ மாகாண சபை பிரதி தவிசாளர் ஒருவருக்கு/ கௌரவ மாகாண சபை உறுப்பினர் ஒருவருக்கு ஆண்டொன்றிற்கு 87,500.00 ரூபா இலவச அஞ்சல் படி உரித்துடையதாகும்.

6.3 கௌரவ மாகாண பிரதம அமைச்சர் / கௌரவ மாகாண அமைச்சர் /கௌரவ மாகாண சபை தவிசாளர் /கௌரவ மாகாண சபை பிரதி தவிசாளர் /கௌரவ மாகாண சபை உறுப்பினர் ஆகியோருக்காக ஒரு கூட்ட அமர்வுக்காக 250.00 ரூபா படியும் ஆலோசனை செயற்குழு கூட்ட அமர்வொன்றிற்காக 1000.00 ரூபா படியும் ஏனைய செயற்குழுக்களுக்காக 1000.00 ரூபா படியும் உரித்துண்டு.

6.4 கௌரவ மாகாண சபை உறுப்பினர்களுக்காக மாதமொன்றிற்கு 500.00 ரூபாவான விருந்துபசார படிக்கு உரித்துண்டு.

6.5 கௌரவ மாகாண சபை உறுப்பினர்களின் உதவிப் பணிட்டொகுதிக்காக சாரதியாளர் ஒருவர் அங்கீகரிக்கப்படாததால் மாதாந்தம் 1,750.00 ரூபா சாரதிப் படி உறுப்பினர்களுக்கு உரித்துடையதாகும்.

7. **வேறு விடயங்கள்**

7.1 அரச நிதிகளை வெளிநாட்டுப் பயணங்களுக்காக பயன்படுத்தப்படும் போது கையாள வேண்டிய செயல்நெறிகள் தொடர்பில் எனது சீஎஸ்ஏ/1/4 ஆம் இலக்க 2016.11.23 மற்றும் 2017.01.26 ஆம் திகதிய கடிதங்களின் மூலம் வழங்கப்பட்டுள்ள ஆலோசனைகளுக்கமைய நடவடிக்கை எடுக்க வேண்டும். மேலும் மேற்போந்த சுற்றறிக்கையின் ஒதுக்கீடுகளுக்கு முரணாக வெளிநாட்டுப் பயணங்களுக்கான கோரிக்கைகள் அங்கீகாரத்திற்காக சமர்ப்பித்தலாகாது.

7.2 2015 செப்டெம்பர் மாதம் 16 ஆந் திகதி எட்டப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்திற்கமைய கௌரவ மாகாண பிரதம அமைச்சர்களுக்காக ஆலோசகர்களை நியமித்தலாகாது.

7.3 மேற்காட்டப்பட்ட எரிபொருள், தொலைபேசி, மேலதிக நேர மற்றும் இணைந்த படி செலவுகளை உச்சக்கட்ட எல்லைகளை மீறி செலவு செய்வதற்கோ அதற்காக செலவிடப்பட்ட மேலதிக விலைப்பட்டியல்களை பூர்த்தி செய்வதற்காகவோ அங்கீகாரத்திற்குச் சமர்ப்பிக்கப்படலாகாது.

7.4 கௌரவ மாகாண பிரதம அமைச்சர், கௌரவ மாகாண அமைச்சர், கௌரவ மாகாண தவிசாளர் மற்றும் கௌரவ மாகாண சபை பிரதி தவிசாளர் ஆகிய பதவி வகிப்போருக்கு அப்பதவிகளுக்குரிய படிகள் மட்டும் உரித்தாகுவதுடன், கௌரவ மாகாண சபை உறுப்பினர் ஒருவராக பெற்றுக் கொள்ளக் கூடிய படிகளை மேலதிகமாக அப்பதவியின் பொருட்டு செலுத்துதல் ஆகாது.

7.5 இச்சுற்றறிக்கையில குறிப்பிடப்பட்டுள்ள படிகளை 2018 அக்டோபர் மாதம் 01 ஆந் திகதி தொடக்கம் வலுப்படுத்துவதற்கு சகல பிரதம செயலாளர்களும் நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

7.6 2018 ஆம் ஆண்டிற்குரிய வரவுசெலவு பாராளுமன்றத்தால் நிறைவேற்றப்பட்டுள்ளதால் இச்சுற்றறிக்கையை செயற்படுத்தத் தேவையான ஒதுக்கீடுகளை 2018 ஆம் ஆண்டிற்காக ஏற்கனவே ஒதுக்கப்பட்டுள்ள வரவு செலவு ஒதுக்கீடுகளினுள் முகாமை செய்து கொள்ள வேண்டியதுடன், மேலதிக ஏற்பாடுகள் வழங்கப்படமாட்டாது.

7.7 இதில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகள் தொடர்பான ஆலோசனைகள் மீறப்பட்டால் அல்லது மீறினால் அதற்கான பொறுப்புக் கூறலும் வகைக் கூறலும் தனிப்பட்ட முறையில் பிரதம செயலாளர்களைச் சார்ந்திருக்கும்.

ஒப்பம். **உதய ஆர் செனெவிரத்ன**
சனாதிபதியின் செயலாளர்

பிரதிகள் :

01 பிரதமரின் செயலாளர்

02 அமைச்சரவைச் செயலாளர்

03 செயலாளர், நிதி மற்றும் வெகுசன ஊடக அமைச்சு

04 செயலாளர், அரசாங்க நிருவாகம், முகாமைத்துவம் மற்றும் சட்டமும் ஒழுங்கும் பற்றிய அமைச்சு

05 செயலாளர், மகாண சபைகள், உள்ளூராட்சி மற்றும் விளையாட்டுத்துறை அமைச்சு

06 கணக்காய்வாளர் தலைமை அதிபதி

07 பாராளுமன்றப் பொதுச் செயலாளர்

08 செயலாளர், நிதி ஆணைக்குழு

} தகவலுக்கும் உரிய நடவடிக்கைக்கும்